**Starting time 11.54A.M.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 9/2020**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 06.06.2024 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமர் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : தாவா சொத்து ஆரம்பத்தில் பிரதிவாதியின் தகப்பனார் ராமசாமி என்பவருக்கு டி கார்டு மூலமாக பாத்தியப்பட்டது என்றால், ஆமாம். பிரதிவாதியும் அவரது தகப்பனாரும் ஆதிதிராவிட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்றால், ஆமாம். ராமசாமியிடமிருந்து சொத்து எனக்கு எவ்வாறு வந்தது என்றால், ராமசாமி சிவப்பாயி என்பவருக்கு சொத்தை விற்றுவிட்டார். ராமசாமி சிவப்பாயி அம்மாளுக்கு சொத்தை விற்று விற்றார் என்ற விவரம் எனக்கு நேடியாக தெரியாது என்றால், ஆமாம்.

2. சிவப்பாயி அம்மாள் பெயரில் உள்ள கிரய ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், கொடுத்துள்ளேன். சிவப்பாயி அம்மாளுக்கு ராமசாமி எந்தவிதமான பத்திரத்தையும் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்றாலும், நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும், சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதி நல்லத்தம்பிதான் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால், இல்லை. என்னுடைய முதல்

விசாரணையில் ராமசாமி பெயரில் உள்ள டி கார்டு கண்டிஷன் காலம் முடிவடைவதற்கு முன்பாகவே அவர் விற்றுவிட்டதாகவும், அதனால் அந்த டி கார்டு ரத்து செய்யப்பட்டுவிட்டதாகவும் நான் கூறியுள்ளேன் என்றால் ஆமாம். அது சம்மந்தமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், தெரியவில்லை.

3. அவ்வாறு இருந்தால் கண்டிஷனை மீறி சிவப்பாயி அம்மாள் கிரயம் பெற்றது தவறு என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. சிவப்பாயி அம்மாள் எனக்கு என்ன உறவு என்றால், அத்தை ஆகிறார். எனது தகப்பனார் உடன் பிறந்த அக்கா. சிவப்பாயி அம்மாள் இறந்த பிறகு அந்த சொத்து அவருடைய வாரிசுகளுக்கு சென்றது என்றால், இல்லை, அவருக்கு வாரிசு இல்லை. நான் கூறுவது போல சிவப்பாயி அம்மாள் அந்த சொத்தை வாங்கவும் இல்லை, அனுபவம் செய்யவும் இல்லை என்றால், சரியல்ல. அனுபவம் செய்தார். தாவா சொத்திற்கு அருகில் எனக்கு விவசாய நிலம் இருக்கிறதா என்றால் 27 செண்ட் நிலம் வாங்கியுள்ளேன்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time: 12.02 P.M.

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.